DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC. No. | : | 57/2014 |
| Deposition of Witness for | : | P.W.9 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | மாரிமுத்து |
| Father's Name | : | மாரிமுத்து |
| Village | : | தேவகோட்டை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.02.2026

**முதல் விசாரணை:**

நான் காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 13.08.2013 ம் தேதி ஆறாவயல் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது தேவகோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிசிச்சையில் இருந்த பூசலாகுடி கிராமத்தைச் சேர்ந்த இராமநாதன் மகன் பாஸ்கரன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று ஆறாவயல் காவல்நிலையம் வந்து குற்ற எண்.155/2013 சட்டப்பிரிவு 341, 324, 307 இதச பிரிவின் படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதன் அசல் நகலை தேவகோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் இவ்வழக்கை மேல் விசாரணை செய்ய தேவகோட்டை தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பி வைத்தேன். காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

1. இந்த வழக்கு சம்பந்தமாக 13.08.2013 வருடம் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்ததாக சொல்லியுள்ள நேரம் எத்தனை மணி என்றால் ஞாபகம் இல்லை. தகவல் கிடைத்து நான் காயம் பட்ட நபரை விசாரித்து வாக்குமூலம் வாங்கிய நேரம் எந்த நேரம் என்று ஞாபகம் உள்ளதா என்றால் சுமார் காலை 10.00 மணி இருக்கும். காயம் பட்ட நபரை நான் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் வாங்கும் போது சம்பவம் எந்த நேரம் நடைபெற்றது என விசாரணை செய்து தெரிந்து கொண்டேனா என்றால் நான் விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை, அவர் கூறியதை பதிவு செய்துகொண்டேன். புகார் வாக்கு மூலத்தை காயம் பட்ட நபர் சொல்ல யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். நான் புகார் வாக்குமூலம் வாங்கும் போது காயம் பட்ட நபர் நல்ல நிலையில் இருந்து தான் புகார் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் நல்ல நிலையில் இருந்தார். புகார்தாரர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை வைத்து நான் சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது ஒருதலைப்பட்சமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரிக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்). திருமதி.P.கலை, நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.